### அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியர்கள் மோசமாக நடத்தப்பட்டதற்கு

# அமெரிக்க ஜனாதிபதியிடம் பிரதமர் மோடி தனது கவலைகளை எழுப்பினாரா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 23- அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியர் விமானத்தில் பிணைக் கைதி போல் மோசமான நடத்தப்பட்டமைக்கு இந்தியப் பிரதமர் அமெரிக்க ஜனாதிபதி மற்றும் அமெரிக்க உயர் அதிகாரிகளிடம் தனது கவலைகளை எழுப்பியுள்ளாரா? மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

கடந்த பிப்ரவரி 2025 மாதத்தில் அமெரிக்காவால் மூன்று விமானங்கள் மூலம் பல இந்தியர்கள் இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டனர் என்பது உண்மையா?

நடப்பு ஆண்டில் அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட வேண்டிய நபர்களின் விவரங்கள் அப்படியானால் மாநில வாரியாக மத்திய அரசிடம் கிடைத்துள்ளதா? அதன் விவரம்?

அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட வேண்டியஇந்தியகுடிமக்களுக்கு போதுமான வசதிகளை வழங்குமாறு ஒன்றிய அரசு அமெரிக்க அதிகாரிகளிடம் கோரியுள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை?

அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியர்களுக்கு நடத்தப்பட்ட மோசமான நடத்தைக்காக பிரதமர் அமெரிக்க ஜனாதிபதி மற்றும் அமெரிக்க உயர் அதிகாரிகளிடம் தனது கவலைகளை எழுப்பியுள்ளாரா? அப்படியானால் அதன் விவரங்கள்?

இந்திய குடியேறிகள் கைவிலங்கு செய்யப்பட்டு அவர்களின் கால்கள் விலங்கிடப்பட்டு அவர்கள் ஒரு துர்பாக்கிய பயணத்தை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பதும் உண்மையா? இது பொதுவாக கடுமையான குற்றவாளிகளுடன் தொடர்புடையது?



அமெரிக்காவிலிருந்து சட்டவிரோதமாக குடியேறியவர்களாகக் குறிக்கப்பட்டு வரும் நாட்களில் நாடு கடத்தப்பட வுள்ள இந்தியர்களை மீண்டும் அழைத்து வர நமது அரசின் சொந்த விமானத்தை அனுப்ப ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

அப்படியானால் இது தொடர்பாக ஒன்றிய அரசு எடுத்த/எடுக்க முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் வெளிவிவகாரத்துறை அமைச்சகத்தின் வெளியுறவு அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம்:-

ஜனவரி 2025 முதல் இன்றுவரை மொத்தம் 388 இந்தியர்கள் அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் 333 பேர் இதுபோன்ற நடவடிக்கைகளின் போது நாடுகடத்தப்பட்டவர்களை மனிதாபிமானத்துடன் நடத்துவது தொடர்பாக இந்திய அரசு அமெரிக்கத் தரப்போடு தொடர்ந்து தொடர்பு கொண்டுள்ளது.

பிப்ரவரி 5ஆம் தேதி தரையிறங்கிய விமானத்தில் நாடு கடத்தப்பட்டவர்களுக்கு குறிப்பாக பெண்கள் மீது கைகால் விலங்குகளைப் பயன்படுத்துவது தொடர்பாக அவர்கள் நடத்தப்பட்ட விதம் குறித்து அமெரிக்க அதிகாரிகளிடம் இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சகம் தனது வருத்தம் மற்றும் கவலைகளை வலுவாகப் பதிவு செய்துள்ளது.

நவம்பர் 2012 முதல் நாடு கடத்தலை ஒழுங்கமைத்து செயல்படுத்துவதற்கான அமெரிக்க நிலையான செயல்பாட்டு நடைமுறை நாடு கடத்தப்படுபவர்களுக்கு கட்டுப்பாடுகளைப் பயன்படுத்துமாறு கோருகிறது. நாடு கடத்தப்படுபவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கட்டுப்பாடுகள் பயன் படுத்தப்படுகின்றன என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

பெண்கள் மற்றும் சிறார்களுக்கு பொதுவாக விலங்கிடப்படவில்லை என்றாலும் நாடு கடத்தப்படுபவர்களின் பொறுப்பில் உள்ள விமான அதிகாரியே இந்த விஷயத்தில் இறுதி முடிவை எடுப்பார். பிப்ரவரி 15 16 2025 அன்று இந்தியாவில் தரையிறங்கிய நாடு கடத்தல் விமானங்களில் எந்தப் பெண்களோ அல்லது குழந்தைகளோ கட்டுப்படுத்தப்படவில்லை என்பதை அமெரிக்கத் தரப்பு உறுதி படுத்தியுள்ளது. இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டவர்கள் வந்தவுடன் அவர்களை நேர்காணல் செய்த பின்னர் எங்கள் நிறுவனங்களால் இது உறுதிப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சட்ட விரோத குடியேற்ற வலையமைப்பை ஒடுக்கும் அதே வேளையில் பாதுகாப்பான ஒழுங்கான மற்றும் சட்டபூர்வ இடம் பெயர்வை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து பிப்ரவரி 12 13 2025 அன்று பிரதமர் அமெரிக்காவிற்கு சமீபத்தில் மேற்கொண்ட விஜயத்தின் போது விவாதிக்கப்பட்டது. நாடு கடத்தப்படுபவர்களுக்கு மனிதாபிமானத்துடன் நடத்தக் கோரும் அதே வேளையில் சட்டவிரோத குடியேற்றத்திற்கு எதிரான இந்தியாவின் நிலையான நிலைப்பாடு மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

சட்டவிரோத குடியேற்றம் மற்றும் மனித கடத்தலை தீவிரமாக கையாள்வதில் நெருக்கமாக ஒத்துழைக்க வேண்டியதன் அவசியத்தை இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர் இதில் மோசமான நபர்கள் குற்றவியல் உதவியாளர்கள் மற்றும் சட்டவிரோத குடியேற்ற அமைப்புகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அமெரிக்க குடியேற்றச் சட்டங்களைமீறியதற்காக கைது செய்யப்பட்ட இந்திய நாட்டினரை மட்டுமே அமெரிக்க நாடு கடத்துகிறது. சட்டவிரோத நடமாட்டம் மற்றும் இடம்பெயர்வு பல தொடர்புடைய செயல்பாடுகளைக் கொண்டுள்ளது மேலும் சட்டவிரோத இயல்புடையது. மேலும் சட்டவிரோத இடம் பெயர்வுக்கு ஈர்க்கப்பட்ட நமது நாட்டினர் பிற குற்றங்களுக்கு இரையாகி விட்டனர். சமீபத்தில் திரும்பி வந்தவர்கள் தங்கள் வேதனையான அனுபவங்களைக் காட்சியளித்துள்ளனர்.

இந்திய அரசாங்கம் சட்டவிரோத குடியேற்ற முகவர்கள் இடம்பெயர்வு மோசடிகள் மற்றும் அத்தகைய சட்டவிரோத குடியேற்றம் செழித்து வளரும் முழு குற்றவியல் சுற்றுச்சூழல் அமைப்பையும் கண்டறிந்து அவர்களுக்கு எதிரான வலுவான நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்துகிறது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

### தொகுதி மறுசீரமைப்பு முதல்வரின் முயற்சி வரலாற்று சிறப்புமிக்கது!

# தொடர்ந்து துரோகம் செய்துவரும் பா.ஜ.க.வை தமிழ் மண்ணிலிருந்து அகற்றுவோம்!

## தமிழ்நாடு விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, மார்ச் 24- நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறை மூலம் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள் பெருமளவு தொகுதிகளை இழந்து, வஞ்சிக்கப்படும் நிலையைத் தடுத்து நிறுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்துவரும் முயற்சிகள் மிகுந்தப் பாராட்டுதலுக்கும் வரவேற்பிற்கும் உரியதாகும். இந்த நோக்கத்திற்காக நேற்று (22.3.2025) சென்னையில் பல்வேறு மாநில முதலமைச்சர்கள் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளக்கூடிய ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளார்.



இந்தக் கூட்டத்தின் அடிப்படை நோக்கம் நாடாளுமன்றத் தொகுதிகளின் மறுசீரமைப்பு என்பது மக்கள் தொகை அடிப்படையில் இருந்தால், அது மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் ஒன்றிய அரசின் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்களுக்கு பெரும் இழப்பு ஏற்படும். இது ஒன்றிய அரசின் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்களுக்கானத் தண்டனையாக அமைந்திடும்.

ஆகவே தொகுதி மறுவரையறை என்பது மக்கள் தொகை அடிப்படையில் மேற்கொள்ளக் கூடாது என்பதேயாகும். முழுக்க முழுக்க இது மாநில உரிமை சார்ந்த பிரச்சனையாகும். அரசியல் துளியும் இல்லாததாகும். தற்போது உள்ள எண்ணிக்கையின் அடிப்படையில், விகிதாச்சார அடிப்படையில் மட்டுமே மறுசீரமைத்திட வேண்டும் என்பதை பிரதான நோக்கமாக இந்தக் கூட்டம் கொண்டுள்ளது.

மக்கள் தொகை அடிப்படையில் மறு வரையறை செய்வதன் மூலம் தமிழ்நாட்டுக்கு தொகுதிகள் குறைவதைத் தடுப்பதற்கும், விகிதாச்சார அடிப்படையில் மறு வரையறை செய்வதன் மூலம் தமிழ்நாட்டுக்கு கூடுதலாக நாடாளுமன்றத் தொகுதிகள் கிடைப்பதற்கும் தமிழ்நாடு அரசு எடுக்கும் முயற்சிக்கும் எதிர்ப்பு தெரிவித்து, கருப்பு கொடி ஏற்றுவதன் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு தீராத அப்பட்டமான துரோகத்தை அண்ணாமலையும் அவரது தலைமையிலான பாரதிய ஜனதா கட்சியும் செய்துள்ளது. இது வன்மையானக் கண்டனத்திற்கு உரியதாகும். தமிழ்நாட்டு மக்கள் இதனை அடையாளம் கண்டு அவர்களை தமிழ்நாட்டு மண்ணிலிருந்து வேரோடு அகற்றிட உறுதி பூண வேண்டும்.

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் தமிழ்நாட்டின் தொகுதிகள் குறையாது என்று மட்டுமே கூறியுள்ளாரே தவிர, மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யப்பட மாட்டாது என்று அவர் இதுவரை கூறவில்லை. அவரோ பிரதமர் மோடியோ இது குறித்து ஒரு தெளிவான விளக்கத்தை இன்று வரை கூறிடவில்லை. அந்த அடிப்படையில் பார்த்தால் தொகுதி மறுவரையறை மக்கள் தொகை அடிப்படையில் செய்யப்படும் என்பதும் அதன் மூலம் மக்கள் தொகையை கட்டுப்படுத்த வேண்டும் என்ற திட்டத்தை நடைமுறைப் படுத்தாமல், மக்கள் தொகை பெருக்கத்தை செய்துள்ள வட மாநிலங்கள் பயன்பெறும் என்பதும் உறுதியாகிறது.

குறிப்பாக இந்தி பேசும் மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை கூடும். அதன் மூலம் தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என பாரதிய ஜனதா கட்சி விரும்புவது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. தமிழ்நாட்டின் தொகுதிகளை மாற்றாமல் உத்திரபிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களுக்கு உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்திக் கொடுத்தாலும் அது தென்மாநிலகளுக்கு இழைக்கக்கூடிய அநீதியாகும். எனவே தான் இதனைத் தடுத்திட இந்த மகத்தான முயற்சியை முதலமைச்சர் எடுத்துள்ளார். மக்கள் தொகை கட்டுப்படுத்த வேண்டுமென்ற ஒன்றிய அரசின் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய மாநிலங்கள் எந்த வகையிலும் இந்தத் திட்டத்தின் மூலம் பாதிக்ககூடாது என்பதற்காக இந்த முயற்சியை முன்னெடுத்து இருக்கிறார். இது தமிழ்நாட்டுக்கு மட்டும் அல்ல ஒட்டுமொத்த தென் மாநிலங்களுக்குமான ஒரு பொதுப் பிரச்சனையாகும்.

தமிழ்நாட்டில் ஒரு கட்சியின் தலைவராக இருக்கக்கூடிய அண்ணாமலை தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு செய்து வரும் துரோகங்களுக்கு உறுதுணையாக இருந்து செயல்படுவது வன்மையானக் கண்டனத்துக்குரியது. தமிழ்நாட்டு மக்கள் இதனை சரியாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அரசியல் செய்வதற்கு ஆயிரம் களங்கள் இருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டு மக்களின், மண்ணின் ஒரு அடிப்படை உரிமையை நிலைநாட்டுவதற்கு எடுக்கக்கூடிய முயற்சிக்கு ஒத்துழைப்பு தராவிட்டாலும் துரோகம் செய்யாமல் இருப்பது அண்ணாமலைக்கும் அந்த கட்சிக்கும் நல்லது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.



நெல்லை சந்திப்பு பேருந்து நிலையத்திலிருந்து 7 வழித்தடங்களுக்கு புதிய பேருந்துகளை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ கொடியசைத்து துவக்கி வைத்தார்.நிகழ்வில் மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், தர்மன்,சுரேஷ், பேச்சிபாண்டியன், பிரபு பாண்டியன்,சுதா மூர்த்தி, அண்டன் செல்லதுரை, அன்பழகன்,மண்டல தலைவர்கள் ரேவதி பிரபு, கதீஜா இக்லா பாசிலா, மகேஸ்வரி, மாரியப்பன், சுந்தர்,ஜூலியட் மேரி,சபி அமீர் பாத்து, அனிதா,செல்வம் என்ற கருப்பசாமி,சாய்பாபா மற்றும் அதிகாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவிற்கே வழிகாட்டும் தமிழ்நாடு பட்ஜெட்!

**குறள்: 'கொடையாளி செங்கோல் குடியோம்பல் நான்கும் உடையானாம் வேந்தர்க் கொளி'**

பொருள்: இரக்கம் நிறைந்து கொடுத்தலும்,உயிர்களைக் கண்டு இரங்கலும்,நீதி தவறாது ஆட்சியும்,குடிமக்களைப் பேணலும் ஆகிய நான்கு செயல்களுடைய அரசனே பிற அரசர்க்கு வழிகாட்டியாம்.

எனவே! இந்த குறளுக்கு ஒவ்வாத ஒன்றிய அமைச்சர் நம்முடைய நிர்மலா சீதாராமன் என்பதில் எந்த ஐயமும் இருக்கப் போவதில்லை? நம்முடைய நிதியமைச்சர் இந்த ஆண்டுக்கான (2025 மற்றும் 2026) நிதிநிலை அறிக்கையை பாராபட்சத்துடன் வேண்டுமென்றே! தமிழ்நாட்டை புறக்கணிப்பு செய்து விட்டு நாடாளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்பதை நினைக்கும் போது மனதிற்குள் ஒரு விதமான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது காரணம் இந்தியா பல மாநிலங்கள் இணைந்தது கூட்டாட்சி தத்துவத்தை கடைபிடித்து வளர்ந்து வரும் மாபெரும் ஜனநாயக நாடு என்பதில் எந்த சந்தேகமுமில்லை.?

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ஜனநாயக ஆட்சி! தொடங்கிய காலத்தில் இருந்து பதவியில் இருந்த பிரதமர்கள் தலைமையில் தங்களது நிதி அமைச்சர்களின் மூலம் நாடாளுமன்றத்தின் அவையில் மத்திய நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்பது கடந்தகால வரலாறு ஆனால் இப்போது, ஜனநாயகத்தின் குரல் வளையை உடைக்கும் நோக்கில் இப்படியொரு ஓரவஞ்சனை புத்தியுடன் அதிகார திமிரில் பிஜேபி!மோடி அரசு தாக்கல் செய்திருக்கும் மத்திய பட்ஜெட் என்பது பாசிச மோடி அமித்ஷா கும்பலின் இந்துத்துவா சர்வாதிகாரத்தின் நீட்சியே.. ஆகும். இந்த நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்திருக்கும் நிர்மலா சீதாராமன்,சுமார் 48 லட்சம் கோடி ரூபாய்க்கான வரவு செலவு திட்டத்தின் விரிவான அறிக்கை உள்ளடக்கியதாக பட்ஜெட் அமைந்துள்ளது, குறிப்பாக மத்தியில் தனி மெஜாரிட்டி இல்லாத காரணத்தால் பிஜேபி ஆட்சியை கண்மூடித்தனமாக ஆதரிக்கும் பீகார் மாநிலத்தின் ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சியின் தலைவர் திரு நிதிஷ் குமார் அவர்களையும், ஆந்திராவில் தெலுங்கு தேசக் கட்சியின் தலைவர் சந்திரபாபு நாயுடு அவர்களையும் திருப்தி படுத்தும் விதமாக தான் இந்த பட்ஜெட் போடப் பட்டுள்ளது என்பது நமக்கு தெள்ளத் தெளிவாக தெரிகிறது,

பேரரசர் தனக்கு விருப்பப்பட்டவர்களுக்கு பிச்சை போடுவார் என்பது போல, பாசிச மோடி அரசு தனக்கு யார் தேவையோ அவர்களுக்கு மட்டும் நிதியை வாரி இறைத்திருக்கிறது. இந்த நாட்டில் அதிகப்படியாக வரியை ஒன்றிய அரசுக்கு வாரி கொடுக்கும் மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்று. **அந்த தமிழ்நாட்டுக்கு சிறப்பு நிதி எதுவும் கிடையாது என்றால், தமிழ்நாட்டின் பெயரே பட்ஜெட்டில் இருக்காது என்றால் இதற்குப் பெயர்தான் இந்து ராஷ்டிரத்தின் முதல் பட்ஜெட். இனி இந்த நாட்டில் கூட்டாட்சி தத்துவத்தை யாரும் பேச முடியாது என்பதை விளக்கும் ஒற்றை ஆட்சி முறையின் முதல் பட்ஜெட்.**

கடந்த பட்ஜெட்டை விட இந்த பட்ஜெட்டில் வேளாண்மை கல்வி உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய தேவைகளுக்கும் நிதி குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்று வேளை உணவை சாப்பிடுகின்ற மக்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்ற இந்த நிலையில் தங்கத்தின் விலையை குறைத்து விட்டோம், விண்வெளி சாதனங்களுக்கான பொருட்களின் விலையை குறைத்து விட்டோம் என்கிறது மோடி அரசு.

பீகாரும் ஆந்திராவும் முறையாக கேட்பது போல கேட்டிருந்தால் தமிழ்நாட்டிற்கும் நிதி கிடைத்திருக்கும் என்று கூறுகிறார்கள் பாசிச பி.ஜே.பி.யினர். தமிழ்நாடு வாரிக் கொடுத்த நிதியில் எங்களது பங்கு எங்கே என்று கேள்விக்கு பதில் கூற வக்கில்லாதவர்கள் ஒன்றிய அரசின் காலில் விழுந்து கெஞ்ச வேண்டும் என்கிறார்கள்.

தமிழ்நாட்டில் புயல், வெள்ளம் வந்து பேரழிவு ஏற்பட்டது ஒன்றிய அரசு நிவாரண நிதி வழங்குவதில்லை.

இப்போது, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 2023-24 ஆம் ஆண்டிற்கான 4வது தவணை நிதி ரூ.249 கோடியும், 2024-25 ஆம் ஆண்டிற்கான நிதி ரூ.2,152 கோடியும் தமிழ்நாட்டுக்கு வழங்கப்படவில்லை.

மெட்ரோ பணிக்கான நிதி,

ஜிஎஸ்டி நிலுவை தொகை,

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்ட நிதி

பிரதமர் வீடு கட்டும் திட்டம் என பல வழிகளில் தமிழகத்திற்கு தர வேண்டிய நிதியை ஒன்றிய அரசு சரிவர தராமல் இழுத்தடித்து வருகிறது.

இப்படி பல வழிகளில் தமிழகத்தை புறக்கணித்தும் வஞ்சித்தும் நிதி தராமல் சர்வாதிகாரப் போக்குடன் நடந்து கொள்ளும் ஒன்றிய தலைமை அமைச்சர் மோடி எங்கே?

**குறள்:இயற்றலும் ஈட்டலும் காலத்தலும் காத்த வகுத்தலும் வல்லதரசு**

பொருள் : பொருள் முதலியவைகளைப் பெருக்க வகை செய்தலும், வந்த பொருட்களைச் சேர்த்தலும், சேர்த்து வைத்த பொருட்களைப் பேணிக் காத்தலும், காத்து போற்றியவகைகளை முறையாக வகுத்துச் செலவு செய்தலும் சிறப்பான மன்னனின் கடமையாகும்.

இந்த குறளின் பொருளுக்கு ஏற்பத் தான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் தமிழ் நாட்டின் சூப்பர் முதல்வர் தளபதியின் தலைமையில் இந்த ஆண்டுக்கான (2025 மற்றும் 2026)நிதிநிலை அறிக்கையை தமிழ் நாடு சட்டமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார் நம்முடைய நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள்,

இது சுமார் 2,23,988 லட்சம் கோடி ரூபாய் வரவு செலவு திட்டத்திற்கான நிதிநிலை அறிக்கை என்பது கூடுதல் தகவல் என்றாலும் குறிப்பாக வேளாண்மை துறையை தவிர்த்து மீதமுள்ள ஒட்டுமொத்த துறைக்கான நிதி பகிர்வு இத்தனை லட்சம் கோடி ரூபாய் என்பது கூடுதல் தகவலாகும், இந்த சிறப்பு வாய்ந்த பட்ஜெட் ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு தேவையான அனைத்து அம்சங்களும் நிறைந்த பட்ஜெட் என்று அரசியல் தலைவர்கள், பொருளாதார வல்லுனர்கள்,எதிர் கட்சியை சார்ந்தவர்கள், அரசியல் விமர்சகர்கள், அனைவரும்,பாராட்டும் விதமாகத் தான் இந்த பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறார். அவர் தாக்கல் செய்த பட்ஜெட்டில் சில முத்தான வரிகள்

**திருக்குறளை 45 புதிய மொழிகளில் மொழிபெயர்க்க ரூ.133 லட்சம் ஒதுக்கப்படும் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.**

**தமிழின் பெருமை மற்றும் சிறப்பை உலகத் தமிழ் இளைஞர்கள் மத்தியில் கொண்டு செல்ல, தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியாவில் உள்ள பிற நகரங்களில் உள்ள பள்ளிகளிலும், உலகத் தமிழ் மையங்களிலும் பயிலும் மாணவர்களுக்கு கணினி வழி உலகத் தமிழ் ஒலிம்பியாட் போட்டி ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும். இதில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ரூ. 1 கோடி வழங்கப்படும்.**

**தென்கிழக்கு ஆசியா, மத்தியத் தரைக்கடல், அரேபிய தீபகற்பம், ரோமப் பேரரசு பகுதிகளுடன் வைத்துக்கொண்ட கடல் வழி வணிகம் தொடர்பாக ஆழ்கடல் அகழ்வாய்வுகளை தமிழ்நாடு கடற்கரைப் பகுதிகளில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் முதல்கட்டமாக இந்த ஆண்டு தொல்லியல் ஆய்வாளர்களின் அறிவுரைப்படி காவிரிப்பூம்பட்டினம் முதல் நாகப்பட்டினம் வரை ஆழ்கடல் அகழ்வாய்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.**

**இந்த நிதியாண்டில் (202526) ஒரு லட்சம் புதிய வீடுகள் கட்ட ரூ.3,500 கோடி ஒதுக்கீடு**

**முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 6,100 கிலோமீட்டருக்கு கிராமப்புற சாலைகளை மேம்படுத்த ரூ. 2100 கோடி ஒதுக்கீடு**

**கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய சாலைகளின் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.120 கோடி ஒதுக்கீடு**

**தமிழ்நாட்டின் அனைத்து குக்கிராமங்களும் தன்னிறைவு அடையும் வகையில் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற உருவாக்கப்பட்ட அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2329 கிராம ஊராட்சிகளில் ரூ.1087 கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்படும்.**

சென்னை மாநகராட்சியில் நிலவும் கடுமையான போக்குவரத்து நெரிசலைத் தடுக்கும் ஒரு பகுதியாக வேளச்சேரி மற்றும் கிண்டியில் வசிக்கும் 7 லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் வேளச்சேரி பிரதான சாலை துவங்கி, குருநானக் கல்லூரி சந்திப்பு வரை 3 கி.மீ. நீளத்திற்கு ரூ. 310 கோடி மதிப்பில் மேம்பாலம் கட்டப்படும்.

ரயில்வே துறையுடன் இணைந்து கொருக்குப்பேட்டை ரயில்வே மேம்பாலம் ரூ. 70 கோடி மதிப்பில் கட்டப்படும்.

காஞ்சிபுரம், ஈரோடு, கரூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட 10 இடங்களில் புதிதாக தோழி மகளிர் விடுதிகள் கட்ட ரூ.77 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**சைதை சாதிக்**
தலைமைக் கழகப் பேச்சாளர்

உயர் கல்விக்காக பெரு நகரங்களுக்கு வருகை புரியும் மாணவிகளுக்காக சென்னை, கோவை, மதுரை ஆகிய மாநகரங்களில் தலா ஆயிரம் மாணவியர் தங்கும் வகையில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய மூன்று மாணவியர் விடுதிகள் ரூ.275 கோடி மதிப்பில் கட்டப்படும். இந்த விடுதிகளின் மாணவியர் சேர்க்கையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையின மாணவர்களுக்கு உரிய முன்னுரிமை வழங்கப்படும்.

பழங்குடியின மாணவர்களின் இடைநிற்றலைக் குறைக்கும் நோக்கத்தோடு அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே உயர் கல்வியைப் பெறும் வகையில் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம், தாளவாடி, கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம், கல்வராயன் மலை, கிருஷ்ணகிரி மாவட்டம் தளி, நீலகிரி மாவட்டம் கோத்தகிரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை உள்ளிட்ட இடங்களிலுள்ள தொலைதூர மலைப்பகுதிகளில் அமைந்துள்ள 14 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும்.

குன்னூர், நத்தம், ஆலந்தூர், விக்கிரவாண்டி, செய்யூர், மானாமதுரை, முத்துப்பேட்டை, திருவிடைமருதூர், பெரம்பலூர், ஒட்டப்பிடாரம் ஆகிய 10 இடங்களில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்

கருப்பை வாய் புற்றுநோயைத் தடுக்க 14 வயது பூர்த்தியான அனைத்து பெண் குழந்தைகளுக்கும் ஹெச்.பி.வி. தடுப்பூசியை படிப்படியாக வழங்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக ரூ. 36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் புதிய விமான நிலையம் அமைக்கப்படும்.**

**கோவைசூலூர் பகுதியில் 100 ஏக்கர் பரப்பளவிலும், பல்லடம் அருகே 100 ஏக்கர் பரப்பளவிலும் செமி கண்டக்டர் உற்பத்திக்கான இயந்திரத் தொழிற் பூங்காக்கள் உருவாக்கப்படும்.**

**இரண்டு பெற்றோரையும் இழந்து உறவினர்கள் பராமரிப்பில் மிகவும் வறிய நிலையில் உள்ள 50,000 குழந்தைகள் 18 வயது வரை இடைநிற்றல் இன்றி பள்ளி கல்வியை தொடர மாதம் ரூ.2,000 உதவித்தொகை.**

**ஓசூரில் 5 லட்சம் சதுர அடி பரப்பளவில் ரூ.400 கோடி மதிப்பீட்டில் டைடல் பூங்கா ஒன்று அமைக்கப்படும். விருதுநகர் மாவட்டத்தில் புதிய மினி டைடல் பூங்கா ஒன்றும் அமைக்கப்படும்.**

அரசுப்பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு பொறியியல், வேளாண்மை உள்ளிட்ட தொழிற்படிப்புகளில் சேர 7.5% உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இதன் கீழ் தற்போது 41,038 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். அவர்களின் கல்விக் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்ளும் வகையில் ரூ.550 கோடி ஒதுக்கீடு.

20.லட்சம் மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி

மகளிர் உரிமைத்தொகைக்காக ரூ.13,807 கோடி ஒதுக்கீடு - இதுவரை பலன் பெறாதவர்கள் விண்ணப்பிக்க விரைவில் அறிவிப்பு

புதிய கூட்டு குடிநீர் திட்டங்கள் ரூ.6,668 கோடியில் 7 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்

இருமொழி கொள்கையில் மாற்றமில்லை. ஒன்றிய அரசு கொடுக்காத கல்வி நிதிக்கு பதிலாக தமிழ்நாடே 2000 கோடி ஒதுக்கும்

புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கும் 5 லட்சம் மக்களுக்கு இல்வச வீட்டு மனை பட்டா வழங்கப்படும்

இலங்கை சிறையில் உள்ள மீனவ குடும்பங்களுக்கு ரூ.500 உதவித்தொகை

**இவையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் ஏகோபித்து வரவேற்போடு வரவேற்ற ஏற்றுக் கொண்ட மகிழ்ந்த திட்டங்கள் வெற்றி நடை போடுவோம் படைப்போம் வரலாறு - வெல்வோம் 200..**